அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி
அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

ந.க.எண். 023896 /எச்.1/2021 நாள் : 08.03.2022

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – மே–2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் – சார்பு.

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதங்கள், நாள்.08.12.2021 மற்றும் 17.12.2021.

*****

பார்வையில் காணும் கடிதங்களில் மே–2022, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் விவரங்களடங்கிய பட்டியலில் மாணவர்களின் பெயர் சேர்த்தல் (By Transfer) / நீக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள 15.12.2021 முதல் 24.12.2021 வரையிலான நாட்களில் வாய்ப்பு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட மே–2022 மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை, அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களும் 08.03.2022 முதல் 31.03.2022 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in–க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அறிவுறுத்திடுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

**நகல்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவர்கள்.
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.